1973 மார்ச் 17]

ஒரு அகதிக்கு அவரது வியாபாரத்தை மேம்படுத்த அளிக்கப்படும் கடனுதவியின் உயர் அளவு ரூ. 5,000 என்று வரையறுக்கப்பட்டுள்ளது. வியாபாரத்தை அல்லது ஒரு தொழிலைத் தொடங்க அகதிகள் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படும் கடன் தொகையின் உயர் அளவு ரூ. 25,000 என்று வரையறுக்கப்பட்டுள்ளது. மேற் சொன்ன இரு நேர்வுகளிலும் அவ்வியாபாரத்தில் அல்லது தொழிலில் வேலைக்கமர்த்தப்படுகிற ஒவ்வொரு அகதிக்கும் ரூ. 5,000 என்ற வீதத்தில் கடன் தொகை உயர்த்தி கொடுக்கப்படலாம் ஆனால் அவ்வாறு உயர்த்தி கொடுக்கப்படுவது ரூ. 50,000-க்கு மேற்படக் கூடாது அகதிகள் கூட்டுறவு சங்கங்களின் நேர்வில் அல்லது அகதிகள் (கூட்டுத்) தொகுதியினர் நேர்வில் திட்டங்களின் செலவைப் பொருத்து கடனுதவித் தொகை ரூ. ஒரு லட்சம் வரை வழங்கப்படும். ரூ. 10,000-க்கும் அதிகமாக வங்கியால் நிதியுதவியளிக்கப்படுகின்ற பெரிய திட்டங்களிற் சில பின்வருமாறு :—ஆட்டோ ரிக்ஷாக்கள், டாக்சிகள் வாங்குதல், மரம் அறுக்கும் ஆலைகள் நிறுவுதல், அச்சகம் நிறுவுதல், ஐஸ்கிரீம் தொழிற்சாலை நிறுவுதல், சோடா-கலர் உற்பத்தி பானங்கள் உற்பத்தி—விற்பனை.

அகதிகள் கூட்டுறவு நிதியுதவி மேம்பாட்டு வங்கி, அது தொடங்கிய நாள் தொட்டு (நவம்பர் '68) 30-6-72 வரை மொத்தம் ரூ. 102.27 லட்சம் தொகையைத் தனது உறுப்பினர்களுக்குக் கடனாக வழங்கியுள்ளது. இந்த வங்கி 66-1/3 உத்தரவாதமளிப்பதன் மூலம், அகதிகளுக்கு (வணிக வங்கிகளிடமிருந்து) ரூ. 5,000-க்கு மேற்பட்ட கடன் தொகையைப் பெற்றுத்தரவும் செய்கிறது.

## இணைப்பு III

(16-ம் பக்கத்தில் 409-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க)

தமிழ்நாடு அரசு, இந்திய அரசின் மூலம் இம் மாநிலத்தில் கனிவள ஆராய்ச்சித் திட்டம் ஒன்றை மேற்கொள்ளுமாறு ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டச் சிறப்பு நிதி நிறுவனத்தை வேண்டியது. தமிழ்நாடு கனிவள மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் சிறப்பு நிதி நிறுவனம் நிதியுதவி அளிக்க ஐக்கிய நாட்டு நிறுவனம் ஏற்பளித்தது. இத்திட்டத்தின் காலஅளவு 1968 முதல் 1971 வரையிலான மூன்றாண்டுகளாகும். இத்திட்டத்தின் கீழ், வட ஆர்க்காடு மாவட்டம், தென் ஆர்க்காடு மாவட்டம், தருமபுரி, சேலம் மாவட்டங்கள் ஆகியவற்றின் சில பகுதிகளில் 17,000 சதுர கிலோ மீட்டர் பரப்பில் பரவலான முறையிலும், மும்முரமாகவும் கனிப்பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்

பட்டன. இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 120 லட்சமாகும். இதில் கிட்டத்தட்ட ரூ. 80 லட்சம் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தால் வழங்கப் படுகிறது.

இரண்டாவது நிலையாக, 27 திங்கள் கால அளவில் நிறைவேற்றப்பட வேண்டிய தமிழ்நாடு கனிவள மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்குமாறு, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட நிறுவனத்திடம் வேண்டப்பட்டுள்ளது. திட்ட ஆவணம், ஐக்கியநாடுகள் வளர்ச்சித் திட்ட நிறுவனத்தால், ஏற்கெனவே ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இதற்கு இந்திய அரசு விரைவில் முறையாக இசைவு அளித்து கையொப்பமிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

The Government of Tamil Nadu, through the Government of India, requested the United Nations Development Programme Special Fund authorities for a mineral exploration project in this State, and the United Nations approved the Tamil Nadu Mineral Development Project for assistance by the United Nations Special Fund and the project was of three years duration from 1968–71. Under this project, extensive and intensive mineral explorations over an area of 17,000 sq. km. in parts of North Arcot district, South Arcot district, Dharmapuri and Salem districts were taken up. The total cost of the project is Rs. 120 lakhs of which nearly Rs. 80 lakhs is provided by United Nations Development Programme.

The United Nations Development Programme have been requested for sanction of second phase of the Tamil Nadu Mineral Development Project which will be 27 men-months duration. The project document has already been approved by the United Nations Development Programme and is expected to be formally cleared and signed by the Government of India shortly.

## இணைப்பு IV

(17-ம் பக்கத்தில் 410-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க)

தென்னாற்காடு மாவட்டத்தில் பல இடங்களில் கீழே கண்ட கனிப்பொருள்கள் காணப்படுகின்றன. முக்கியக் கனிவளங்களும் அவை கிடைக்கும் இடமும், அளவும் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.